தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொது நிறுவனங்கள் குழு

(2006–2007)

(பதினைந்தாவது பேரவை)



பதினான்காவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள்: 23 JAN 2007

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொது நிறுவனங்கள் குழு

(2006–2007)

(பதின்மூன்றாவது பேரவை)



பதினான்காவது அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1999–2000–ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்) தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (2003–2004) அளித்த நூற்றி ஐம்பத்தி இரண்டாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை.

பொருளடக்கம்

	பொருள்		பக்கம்
2006–2007–ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அமைப்பு		..	iii
I.	முன்னுரை	..	v
II.	அறிக்கை	.. ..	vii
III.	இணைப்பு – அரசால் நிறைவேற்றப்பெற்ற அல்லது நடவடிக்கை மேலும் தொடர விரும்பாத குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள்	..	1 – 15

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொது நிறுவனங்கள் குழு (2006–2007)

(பதின்மூன்றாவது பேரவை)

(2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

* 1. திரு. தா. உதயசூரியன்

உறுப்பினர்கள்

2. திரு. கு. பிச்சாண்டி
   தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)

3. திரு. சி. ஞானசேகரன்
   தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. செல்வி. ஆ. அங்கையற்கண்ணி
5. திரு. எச். அப்துல் பாசித்
6. திரு. ஆ. அருண்மொழி தேவன்
7. திரு. கோ. எதிரொலி மணியன்
8. திரு. ந. கணபதி
9. திரு. ஆர்.டி. கணேசன்
10. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
11. திரு. ஆர். சிவானந்தம்
12. திரு. ந. சுந்தரம்
13. திரு. விடியல் எஸ். சேகர்
14. திரு. ஆர்.எம். பழனிசாமி
15. திரு. தி.க. ராஜா

$ 16. திரு. அ. ராஜன்

17. திரு. டி. ராமச்சந்திரன்
18. திரு. சு.ப. வேலுமணி

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	..	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன	..	இணைச் செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	..	துணைச் செயலாளர்
திரு. கோ. சுப்புராம்	..	சார்புச் செயலாளர்

---

* திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 7–8–2006 முதல் 28–10–2006 வரை,
திரு. தா. உதயசூரியன், உறுப்பினர் 7–8–2006 முதல் 14–11–2006 வரை, தலைவர் 15–11–2006 முதல்.

$ 15–11–2006 முதல்.

I. முன்னுரை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1999–2000ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்) தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (2003–2004) அளித்த நூற்று ஐம்பத்தி இரண்டாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய **பதினான்காவது அறிக்கையை,** குழு (2006–2007) அதிகாரம் அளித்துள்ளவாறு பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1999–2000ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்) தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் (2003–2004) நூற்றி ஐம்பத்தி இரண்டாவது அறிக்கையை குழு 29–07–2004 அன்று பேரவைக்கு அளித்தது. இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான விவரப்பட்டியினை குழு (2006–2007) 29–11–2006–ம் தேதியில் நடைபெற்ற தனது கூட்டத்தில் ஆய்வு செய்தது. 20–12–2006 அன்று அறிக்கைக்கு குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்கு உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் மாநில முதன்மைக் கணக்காய்வுத் துறைத் தலைவர் (சிவில் தணிக்கை) ஆகியோருக்குக் குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சென்னை – 600 009.
20–12–2006,
மார்கழி 5, வியு,
திருவள்ளுவராண்டு – 2037.

தா. உதயசூரியன்,
தலைவர்,
பொது நிறுவனங்கள் குழு.

II. அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1999–2000-ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்) தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (2003–2004) அளித்த நூற்றி ஐம்பத்தி இரண்டாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை.

நூற்று ஐம்பத்தி இரண்டாவது அறிக்கையில் (2003–2004) தொடரப்பட்ட அனைத்து (எட்டு) பரிந்துரைகளும் அரசு அளித்த பதில்களின் அடிப்படையில் தீர்க்கப் பெற்றதாக கருதப்படுகின்றன. இப்பரிந்துரைகளின் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை – 600 009.
20–12–2006,
மார்கழி 5, வீய,
திருவள்ளுவராண்டு – 2037.

தா. உதயசூரியன்,
தலைவர்,
பொது நிறுவனங்கள் குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON PUBLIC UNDERTAKINGS

(2006-2007)

(THIRTEENTH ASSEMBLY)



FOURTEENTH REPORT

Report on the Action taken by the Government on the recommendations contained in the One hundred fifty second Report of the Committee on Public Undertakings (2003-2004) on the paragraphs relating to Municipal Administration and Water Supply Department (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) in the Report (Civil) of the Comptroller and Auditor General of India for the year 1999-2000.

(Action Taken Report)

CONTENTS

		Page
Composition of the Committee on Public Undertakings for the year 2006-2007	..	xiii
I. Introduction	...	xv
II. Report	..	xvii
III. Appendix - Statement showing the observations / recommendations which the Committee does not desire to pursue		1 - 15

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON PUBLIC UNDERTAKINGS (2006-2007)

(Thirteenth Assembly)

(Constituted on 7th August 2006)

CHAIRMAN

* 1. Thiru T. Udaya Sooriyan

MEMBERS

2. Thiru K. Pitchandi
   Chairman, Committee on Estimates (Ex-officio)
3. Thiru C. Gnanasekaran
   Chairman, Committee on Public Accounts (Ex-officio)
4. Selvi. A. Angaiyarkanni
5. Thiru H. Abdul Basith
6. Thiru A. Arunmozhithevan
7. Thiru. G. Ediroli Manian
8. Thiru N. Ganapathy
9. Thiru R.D. Ganesan
10. Thiru S.S. Sivasankar
11. Thiru R. Sivanandam
12. Thiru N. Sundaram
13. Thiru Videyal S. Sekar
14. Thiru R.M. Palanisamy
\$ 15. Thiru T.K. Raja
16. Thiru. A. Rajan
17. Thiru T. Ramachandiran
18. Thiru S.P. Velumani

SECRETARIAT

Thiru M. Selvaraj	Secretary
Thiru V.S. Subramanian	Joint Secretary
Tmt. R. Amirthavalli	Deputy Secretary
Thiru G. Subburam	Under Secretary

---

* Thiru. Pongalur N. Palanisamy from 7-8-2006 to 28-10-2006,
Thiru. T. Udaya Sooriyan, **Member** from 7-8-2006 to 14-11.2006 and **Chairman** from 15-11-2006.

\$ From 15-11-2006.

I. INTRODUCTION

I, the Chairman of the Committee on Public Undertakings having been authorised by the Committee (2006-2007) to submit the Report on its behalf, present this **Fourteenth Report** on the Action taken by the Government on the recommendations contained in the One hundred and fifty second Report of the Committee on Public Undertakings (2003-2004) on the paras relating to Municipal Administration and Water Supply Department (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) in the Report (Civil) of the Comptroller and Auditor General of India for the year 1999-2000.

2. The Committee for the year 2003-2004 presented its One hundred and fifty second Report on the paras relating to Municipal Administration and Water Supply Department (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) in the Report (Civil) of the Comptroller and Auditor General of India for the year 1999-2000 to the Assembly on 29-07-2004. The statement of Action taken by the Government on the recommendations contained in the One hundred and fifty second Report was considered by the Committee (2006-2007) at its meeting held on 29-11-2006. The Report was approved by the Chairman on 20.12.2006.

3. The Committee places on record its appreciation of the valuable assistance rendered by the Secretary, Legislative Assembly and the Principal Accountant General (Civil Audit) in its deliberations.

Chennai - 600 009,
20-12-2006,
Margazhi 5, Viya,
Thiruvalluvar Aandu - 2037.

T. UDAYA SOORIYAN,
Chairman,
Public Undertakings Committee.

II. REPORT

REPORT ON THE ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE ONE HUNDRED AND FIFTY SECOND REPORT OF THE COMMITTEE ON PUBLIC UNDERTAKINGS (2003-2004) ON THE PARAS RELATING TO MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT (CHENNAI METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD) IN THE REPORT (CIVIL) OF THE COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA FOR THE YEAR 1999-2000.

All the (eight) recommendations contained in the One hundred and fifty second Report, have been treated as settled in the light of the replies furnished by the Government. Appendix gives details of these items.

Chennai - 600 009,
20-12-2006,
Margazhi 5, Viya,
Thiruvalluvar Aandu - 2037.

T. UDAYA SOORIYAN,
Chairman,
Public Undertakings Committee.

III. APPENDIX

(vide Paragraph 1 of the Report)

III. இணைப்பு

(அறிக்கையின் பத்தி எண்.1)

STATEMENT SHOWING THE COMMITTEE'S OBSERVATIONS / RECOMMENDATIONS WHICH THE COMMITTEE DOES NOT DESIRE TO PURSUE

அரசால் நிறைவேற்றப்பெற்ற அல்லது நடவடிக்கை மேலும் தொடர விரும்பாத குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள்

MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

CHENNAI METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

Serial No. (1)	*Recommendation No.* (2)	*Paragraph Number* (3)	*Subject* (4)	*Committee's Observation recommendation* (5)
1	1	1.12	Collection of Revenue at high operational cost	The Committee observes that the incorrect assumption of revenue from the unmetered customers as 75 percent instead of 27 percent while analysing the cost benefit led to this injudicious decision. The Committee recommends that, in future, the Board should ensure the correctness of all data used for analysing cost benefit.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Reply from the Department (6)	*Recommendation of the Committee* (7)
The correctness of all data used for analysing cost benefit will be ensured by the Board in future.	Treated as settled

(Municipal Administration and Water Supply Department U.O.Note No.27049 MW 04-9, dated 7-4-2005)

குழுவின் பரிந்துரை
(5)

செலவினால் ஏற்படக்கூடிய அனுகூலம் குறித்து ஆய்வு செய்த போது, மீட்டர் பொருத்தப்படாத வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கின்ற வருவாய் 27 சதவீதம் என்பதற்குப் பதிலாக, 75 சதவீதம் என்று தவறாக அனுமானித்ததே இந்த விவேகமற்ற முடிவை எடுக்க வழி வகுத்தது என்று குழு கருதுகிறது. இனி, செலவினால் ஏற்படக்கூடிய அனுகூலம் குறித்து ஆராய்வதற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து விவரங்களும் உண்மையா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.

துறையின் பதில்
(6)

செலவினால் ஏற்படக்கூடிய அனுகூலம் குறித்து ஆராய்வதற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து விவரங்களும் உண்மையானவையா எனபது வாரியத்தால் இனி வருங்காலங்களில் உறுதி செய்யப்படும்.

குழுவின் பரிந்துரை
(7)

தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.கு. எண்.27049 MW 04-9, நாள் 7-4-2005)

(1)	(2)	(3)	(4)	(5)
2	2	1.16	Collection of revenue at high operational cost.	The Committee observes that the condition of keeping the minimum balance has been withdrawn belatedly despite the poor collection by the bank over the years. The Committee desires to know the date of withdrawal of the condition and the reasons for the delay.

(6)	(7)
The condition of keeping minimum balance of Rs.2.00 crores has been withdrawn from Canara Bank on 27-8-03 on the suggestions of the Public Undertakings Committee vide its meeting held on 26-8-2003 duly intimating the fact to the Canara Bank. The action of Managing Director in having withdrawn the condition of keeping minimum balance of Rs.2.00 crores from Canara Bank has been ratified by the Board (CMWSSB) vide its Resolution No.73/2004 dt.29-6-2004 2) Considering the payment of Maintenance Expenditure, payment of Salary and for the Schemes of the Chennai Metropolitan Water Supply and Sewerage Board the condition of keeping minimum balance has been withdrawn belatedly.	The Committee observes that the withdrawal of the condition to keep a minimum balance in the current account would not prevent the Board from keeping any higher amount in that account; it would only relieve of the Board from keeping the minimum balance of Rs.2 crores in current account facilitating the option of keeping the surplus amount in other accounts fetching interest. The Committee observes that the Board should have periodically reviewed the system of collection through the Bank and initiated timely action for withdrawal of unfavorable conditions in the arrangement. The Committee desires the Board to ever remain vigilant in protecting the interest of the Board, in future and treated the para as settled.

(Municipal Administration and Water Supply Department. U.O.Note .No.27049 MW 04-9, dated 7-4-2005)

குழுவின் பரிந்துரை

(5)

வங்கி மூலம் பல ஆண்டுகளாக சரிவர வசூல் நடைபெறாத போதிலும், குறைந்த பட்ச இருப்பு வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை, காலம் கடந்தே திரும்பப் பெறப்பட்டுள்ளது என்று குழு கருதுகிறது. நிபந்தனை திரும்பப் பெறப்பட்ட நாள் மற்றும் திரும்பப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் ஆகியவை குறித்து குழு அறிய விழைகிறது.

துறையின் பதில்

(6)

26-8-2003 அன்று நடைபெற்ற பொது நிறுவனங்களின் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் அடிப்படையில் வாரியத்தின் குறைந்தபட்ச இருப்பு தொகை கனரா வங்கியில் உள்ள ரூ.2.00 கோடியை திரும்பப் பெற வேண்டும் என்ற ஆலோசனையை ஏற்றுக்கொண்டு கனரா வங்கிக்கு தெரிவிக்கப்பட்டு 27.08.2003 அன்றே திரும்பப் பெறப்பட்டது. மேலும் கனரா வங்கியின் நடப்பு கணக்கில் குறைந்தபட்சத் தொகையாக இருக்கும் ரூ.2.00 கோடியை வாரியம் திரும்பப் பெற்றமைக்கு மேலாண்மை இயக்குநரின் மேற்சொன்ன நடவடிக்கைக்கு வாரியமும் 28.6.2004 அன்று நடந்த வாரியக் குழுமக் கூட்டத்தின் தீர்மான எண் 73/2004, நாள் 29.06.2004ல் பின்னேற்பு அளித்தது.

2. இயக்குதல் மற்றும், பராமரிப்பு செலவு, சம்பளப் பட்டுவாடா மற்றும் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று திட்டங்களுக்கு இக்குறைந்தபட்ச இருப்புத் தொகை அவசியம் என்பதாலும் குறைந்தபட்ச இருப்புத் தொகை வைப்பு காலதாமதமாக திரும்பப் பெறப்பட்டுள்ளது.

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு எண்.27049 /III/ 04-9 நாள் 7-4-2005)

குழுவின் கருத்துரை

(7)

நடப்புக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பு வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை திரும்பப் பெறப்பட்டதால், அக்கணக்கில் கழகம் அதிகத் தொகை வைத்திருப்பதைத் தடுக்காது, அது கழகத்தை நடப்புக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பாக ரூ. 2 கோடி வைத்திருக்க வேண்டும் என்பதிலிருந்து விடுவித்து, மிகைப் பணத்தை வட்டி அதிகம் தரும் வேறொரு கணக்கில் வைக்க வசதி செய்யும் எனக் குழு கருதுகிறது. வங்கி மூலம் வசூல் செய்யும் முறையை காலமுறை தோறும் ஆய்வு செய்து, காலத்தே நடவடிக்கை எடுத்து ஆதரவான நிபந்தனை இல்லாத ஏற்பாட்டை திரும்பப் பெறலாம் எனக் குழு கருதுகிறது. வருங்காலங்களில் கழகத்தின் நலனை பாதுகாக்க கழகம் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டுமென குழு விரும்புவதோடு இப்பத்தி தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

(1)	(2)	(3)	(4)	(5)
3	3	2.8	Unnecessary deposit of funds resulting in loss of interest	The Committee notes that the department though refuted the audit observation, it had agreed that hereafter deposits to other departments would be made after obtaining Government orders and also after receiving detailed estimate from the department concerned. The Committee recommends that the correct procedure should be strictly followed in future.

(6)	(7)
In future the correct method i.e. Deposits will be made in other Departments only on getting the Detailed Estimates from the concerned Departments and Government orders as per the Recommendations of the Committee. *(Municipal Administration and Water Supply Department I.O Note No.27049/MW/04-9, dated 7-4-2005)*	Treated as settled

(5)

தணிக்கைக் கருத்துக்களை துறை மறுத்துள்ள போதிலும், இனிமேல், அரசின் ஆணைகள் பெற்ற பின்னரும், சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து விரிவான மதிப்பீடு பெற்ற பின்னருமே எனைய துறைகளிடம் தொகை வைப்பீடு செய்யப்படும் என்று துறை ஒப்புக்கொண்டுள்ளது என்று குழு அறிகிறது. இனிமேல், சரியான நடைமுறையை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.

(6)	(7)
குழுவின் பரிந்துரைப்படி இனிமேல் அரசின் ஆணைகள் பெற்ற பின்னரும் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து விரிவான மதிப்பீடு பெற்ற பின்னருமே எனைய துறைகளிடம் தொகை வைப்பீடு செய்யப்படும் என்ற சரியான நடைமுறையை கண்டிப்பாக வாரியம் பின்பற்றும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. *முகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.கு. எண்.27049/MW/04-9, நாள் 7-4-2005)*	*தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.*

(1)	(2)	(3)	(4)	(5)
4	4	3.10 & 3.11	Extra Expenditure due to injudicious decision on purchase of cast iron pipes from firms located outside the State	The Committee notes that the Tamil Nadu transparency in tender Act 1998 received the assent of President and published in the Government Gazette only in December 1998 and the Act come into force with effect from 1st October 2000. Tamil Nadu transparency in tender Rules, 2000 was published in the Government Gazette in 2000, whereas the policy decision to have more than one supplier was taken by the Board in 1997. Hence, the department's reply that the above policy decision was taken in accordance with rule 31.4 is not acceptable. The Committee desires to know [i] The list of Project/works which suffered due to delay in supply of materials by ECL. [ii] If the low achievement during 1996-97 and 1997-98 was only due to non-supply of pipes by E C L, why no action was taken to cancel the order and make the procurement from alternative sources and to blacklist the firm.
(6)				(7)
The CI Pipes have been procured for the following scheme works: a. Sewer main laying at Pari Salai to Mogappair East Pumping Station b. Triplicane Head Works c. M/s. GMR Power Corporation at Basin Bridge. 2) The above scheme works have been completed. As per the 'penalty clause' in the Agreement made with firm, penalty, at the rate of 0.1% per week of the price of the delayed items have been recovered from the bills of the supplier, M/s.ECL.				Treated as settled

In case if the firm fails to perform the obligation as per the terms and conditions of the Purchases Order, they may be blacklisted. As such, black listing the firm was not considered in this case since the firm had supplied the materials and these were used effectively.

(Municipal Administration and Water Supply Department I.O.Note No.27049/MA-04-9, dated 7-4-05)

(5)

தமிழ்நாடு 1998 ஆம் ஆண்டு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, அது, 1998 டிசம்பரில்தான் அரசிதழில் வெளியிடப்பட்டது என்றும் இச்சட்டம் 1-10-2000 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளது என்றும் குழு அறிகிறது. தமிழ்நாடு 2000 ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி நடைமுறை விதிகள் 2000 ஆம் ஆண்டில் அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆனால், ஒன்றினுக்கு மேற்பட்ட பொருள்கள் வழங்க நிறுவனங்களைப் பெற்றிருப்பதற்கான கொள்கை முடிவை வாரியம் 1997 ஆம் ஆண்டில் எடுத்தது. எனவே, மேற்குறிப்பிட்ட கொள்கை முடிவு 31.4 ஆம் விதிக்கு இணங்க எடுக்கப்பட்டது என்ற துறையின் பதில் ஏற்கத்தக்கதல்ல.

குழு. பின்வருவன குறித்து அறிய விழைகிறது:

(i) எலெக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங்ஸ் நிறுவனம் பொருட்கள் வழங்கியதில் ஏற்பட்ட காலதாமதத்தால் பாதிக்கப்பட்ட திட்டம்/பணிகள் ஆகியவை பற்றிய பட்டியல்;

(ii) எலெக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங்ஸ் நிறுவனம் குழாய்கள் வழங்காததாலும், 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் சாதனை குறைந்ததாலும் என்றால், அந்நிறுவனத்திடம் வழங்கப்பட்ட வழங்கல் ஆணைகளை ரத்து செய்துவிட்டு, அந்நிறுவனத்தைத் தவறிழைத்தோர் பட்டியலில் சேர்ப்பதற்கும், குழாய்களைக் கொள்முதல் செய்வதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

(6)	(7)
சி.ஐ.குழாய்கள் கீழ்க்கண்ட 3 திட்டப் பணிகளுக்காக கொள்முதல் செய்யப்பட்டது.	*தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.*
(அ) பாரி சாலையிலிருந்து முகப்பேர் கிழக்கு பம்பிங் ஸ்டேஷன் வரை கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல்,	
(ஆ) திருவல்லிக்கேணி தலைமைப் பணிகள்	
(இ) பேசின் பிரிட்ஜ் / திருவாளர்கள் ஜி.எம்.ஆர். பவர் கார்பரேஷன் பணிகள்.	
மேற்கண்ட திட்டங்கள் முடிவடைந்து விட்டன. ஒப்பந்தத்தில், அபராத விதியில் குறிக்கப்பட்டுள்ளபடி தாமதப்படுத்தப்பட்ட இனங்களுக்கான விலையில் 0.1. விழுக்காடு வீதம் அபராதமாக திருவாளர்கள் ஈசிஎல் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்பட்டு விட்டது. கொள்முதல் ஆணையில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்படி அந்நிறுவனம் செயல்படவில்லையென்றால் அந்நிறுவனத்தை தடை செய்யப்பட்ட நிறுவனமாக அறிவிக்கலாம். ஆனால், இக்கொள்முதல் விதிகளின்படி நிறுவனம் அபராதம் செலுத்திவிட்டதால் தடை செயய்யப்பட்ட நிறுவனமாக அறிவிக்க பரிந்துரைக்கப்படவில்லை.	

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.கு. எண்.27(1)/99 VIII (1)-9 நாள் 7-4-2005)

(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
5	5	4.11	Avoidable expenditure on filling of low lying area with borrowed earth	The Committee notes that clay was found 3 meter below the ground level. As such, the Board should have considered the feasibility of utilising the portion of the soil up to 3 meter, which was not clay in nature, for filling work in WDS. The Committee recommends that the recurrence of such omission should be avoided in future.

(6)

In the Board meeting held on 02-11-2004, the Board (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) in its resolution No.162/2004 has directed to issue a circular detailing the circumstances of the case and the direction given, by the Public Undertaking Committee with instructions to comply with the nature of works to be done in future while preparing two different proposals involving items of such as carting away of surplus earth and filling with borrowed earth, keeping in mind the quality requirements of the respective works. Accordingly a circular has been issued by the Board.

(Municipal Administration and WaterSupply Department, G.O.Note No.27049/MW/04-9, dated 7-4-05).

(7)

Treated as settled

(5)

நிலத்தடியில் 3 மீட்டருக்கு கீழேதான் களிமண் காணப்பட்டது என்று குழு அறிகிறது. அவ்வாறிருக்கும்போது களிமண்ணாக இல்லாத 3 மீட்டர் வரையிலுள்ள மணலை நீர் புகிர்மான நிலையத்தில் பள்ளம் நிரப்பும் பணிக்காக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றி வாரியம் பரிசீலித்திருக்க வேண்டும். இனிமேல் இத்தகைய விடுபாடு மீண்டும் நிகழா வண்ணம் தவிர்த்திட வேண்டுமென குழு பரிந்துரைக்கிறது.

(6)

02–11–2004 அன்று நடந்த வாரியக் குழுவின் 253வது கூட்டத்தில் தீர்மானம் எண்.167/2004இல் பொது நிறுவனங்களின் குழு பரிந்துரையில் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகள் ஆகியவைகளை கருத்தில் கொண்டு இனிவருங்காலங்களில் பணிகளின் தன்மை உபரி மண்ணை வண்டிகள் கொண்டு அப்புறப்படுத்துதல் மற்றும் வேறு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மண்ணைக் கொண்டு நிரப்புதல் ஆகிய இவ்விரு இனங்கள் மீது தனித்தனியாக இரண்டு செயற்குறிப்புகள் தயார் செய்யப்பட வேண்டுமெனவும், அந்தப்பணிக்குத் தேவையானதரத்தை மனதில் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒரு விரிவான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(7)

தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.கு. எண்.27049/MW/04-9, நாள் 7-4-2005)

(1)	(2)	(3)	(4)	(5)
6	6	5.9	Extra expenditure due to non adoption of prescribed specifications for bedding and back filling the trenches.	The Committee desires to know whether the Board was aware that Highways Department was to take up the widening of the road in the entire stretch at the same period even before preparation of the estimate for laying for transmission main Porur to Kathipara junction. If not, how could the department justify their action of preparing the estimate with provision to back fill the trench with sea sand.

(6)

The Board was not aware of the road widening works taken up by the Highways Department at the time of preparation of the estimate for the work of "Laying of Transmission Main from Porur to Kathipara". The estimate has been prepared based on the norms specified in the CPHEEO manual. In future the Highways Department will be consulted while preparing this type of pipe laying estimates.

(Municipal Administration and Water Supply Department U.O.Note No.27049 / MW / 04-9 dated 7-4-2005)

(7)

As at the time of preparation of estimate the Board was not aware of the road widening works to be taken up by Highways Department, the Department's reply that the excavated earth could not be utilized for back filling since the same had to be removed then and there due to widening work taken up by Highways Department is not acceptable. The Committee recommends that in future the Board should consider the feasibility of utilising the excavated earth for backfilling as far as possible, at the time of preparation of estimate itself in order to avoid extra expenditure on account of bringing in sea/river sand over and above the standard requirement and carting away entire quantity of excavated earth, and **treated the para as settled.**

(5)

போரூரிலிருந்து – சத்திப்பாரா சந்திப்பு வரை நீர் அனுப்புகை முதன்மைக் குழாய்களைப் பதிப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கு முன்னரே, அதே கால அளவில் அப்பகுதியில் சாலையை அகலப்படுத்தும் பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளவிருந்ததை வாரியம் அறியுமா என்று குழு அறிய விரும்புகிறது. இல்லையெனில், குழியில் கடல் மண்ணை நிரப்புவதற்கான மதிப்பீட்டைத் தயாரித்த தங்கள் செயலை துறை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

(6)

போரூரிலிருந்து கத்திபாரா சந்திப்பு வரை நீர் அனுப்புகை முதன்மைக் குழாய்களைப் பதிப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கு முன்னரே, அதே கால அளவில் அப்பகுதியில் சாலையை அகலப்படுத்தும் பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளவிருந்ததை வாரியம் அறியாது. இனிவரும் காலங்களில் இம்மாதிரி குழாய்கள் பதிக்கும் மதிப்பீடு தயாரிக்கும்போது நெடுஞ்சாலைத் துறையை கலந்தாலோசித்து பின்னர் மதிப்பீடு செய்யப்படும்.

/ நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை அ.கா.கு. எண்.2-049 /III 04-9, நாள் 7-4-2005 /

(7)

மதிப்பீடு தயாரிக்கும்போது, அப்பகுதியில் சாலையை அகலப்படுத்தும் பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளவிருந்ததை வாரியம் அறியாது. நெடுஞ்சாலைத் துறை அப்பகுதியில் சாலையை அகலப்படுத்தும் பணியை மேற்கொண்டதால் வெட்டி எடுக்கப்பட்ட மண்ணை மீண்டும் பள்ளங்களில் நிரப்புவதற்குப் பயன்படுத்தாமல் அவைகள் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டன எனத் துறை தெரிவித்துள்ளது ஒத்துக் கொள்ளக் கூடியதாக இல்லை. வரையறுக்கப்பட்ட குறியீடுகளுக்குமேல் கடல்/ஆற்று மண்ணைக் கொண்டு வந்து பள்ளங்களை நிரப்புவதாலும், வெட்டி எடுக்கப்பட்ட மண்ணை மொத்தமாக அப்புறப்படுத்துவதாலும் ஏற்படக்கூடிய கூடுதல் செலவுகளைக் குறைக்க, இனி வருங்காலங்களில் மதிப்பீடு தயாரிக்கும்போதே வெட்டி எடுக்கப்படும் மண்ணை கூடிய மட்டும் மீண்டும் பள்ளங்களில் நிரப்ப பயன்படுத்துவதற்கு ஏதுவான வழிகளை வாரியம் கையாள வேண்டுமெனக் கருத்துரைத்து, இப்பத்தி தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
7	7	6.8	Overpayment of contractor by wrong application of agreement	The Committee notes that the department which justified the payment on the plea of non-deletion of Clause 28 by specific indication in the addendum now states that the payment should have been made as per clause 6. Thus, the Committee observed that the department is not clear whether the payment was to be made as per clause 6 or clause 28. The Committee recommends that the clauses in the bid document be standardised, deleting clause 28.	The Chennai Metropolitan Water Supply and Sewerage Board is adopting the procedures laid down in the Tamil Nadu Transparency in Tender Rules 2000 in which the clause 14.8 (Commercial conditions) as stated as follows: The tender documents shall include a price adjustment clause to reflect any changes either upward or downward in major cost components such as labour equipment, material and fuel, based on a prescribed formula in the case of large contract where the period of execution is likely to exceed eighteen months. Accordingly, the following clause (clause 13.4) is being followed in the Tender Documents for the contracts having contract period less than 18 months: "The rates and prices quoted by the bidder shall be fixed for the duration of the contract and shall not be subject to adjustment on any account" Further the following clause (clause 13.4) is being followed in the tender documents for the contracts having contract period exceeding 18 months. "The rates and prices quoted by the bidder are subject to adjustment during the performance of the contract in accordance with the provisions of clause 47 (price adjustment) of the conditions of contract". Hence, the payments made to the contractor in the case have been made as per clause 6 of Volume II instead of clause 28 of Volume I. The recommendation made by the Public Undertaking Committee is being strictly followed. *[Municipal Administration and Water Supply Department U.O.Note. No.2(7049 - MW - 04-9, dated 7-4-05]*	Treated as settled

(5)

ஏல ஆவணங்களின் பின் இணைப்பில், திட்டவட்டமாகக் குறிப்பிட்டு 28ஆம் பகுதி நீக்கப்படாததைக் காரணமாகக் காட்டி, தொகை வழங்கியதை நியாயப்படுத்திய துறை, தற்போது, 6ஆம் பகுதியின்படி தான் தொகை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறது. இவ்வாறாக, தொகை 6 ஆம் பகுதியின்படி வழங்கப்பட்டிருக்க வேண்டுமா அல்லது 28 ஆம் பகுதியின் படியா என்பது பற்றி துறைக்கே ஒரு தெளிவு இல்லை என்று குழு அறிகிறது. ஏல ஆவணங்களிலிருந்து, 28 ஆம் பகுதியை நீக்கிவிட்டு, மற்ற பகுதிகள் தரப்படுத்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.

(6)

செங்குன்றத்திலிருந்து போரூர் தலைமை நீரேற்று நிலையம் வரை, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் அனுப்புகைக்காக முதன்மைக் குழாய் அமைக்கும் பணி பிரிவுக்காக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் கூறப்பட்டுள்ள பகுதி 28, தற்போது சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியப் பணிக்காக கோரும் ஒப்பந்தங்களில் சேர்க்கப்படுவதில்லை.

(7)

தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

அதற்குப் பதிலாக தமிழ்நாடு வெளிப்படை ஒப்பந்த விதிகள் 2000-ல் கூறப்பட்டுள்ள பகுதி 14(8) (வணிக கட்டுப்பாடுகளில்) கூறப்பட்டுள்ள நடைமுறைகள் தற்போது சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது. அதாவது, 18 மாதங்களுக்கு மேல் ஒப்பந்தக் காலம் கொண்ட பெரிய பணிகளுக்காக கோரப்படும் ஒப்பந்தங்களுக்கு அப்பணிகளுக்காக தயாரிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களில், அப்பணிகள் மேற்கொள்ளும் காலங்களில் தொழிலாளர்களுக்கான ஊதியம், தளவாடங்கள், பொருட்கள் மற்றும் எரி பொருட்களுக்கான விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு (அதிகமாகவோ அல்லது குறைவாகவோ) தக்க வகையில் விலை சரிகட்டுதலுக்கான வாய்ப்பாடு கொடுக்கப்படும்" அதன்படி 18 மாதங்களுக்கு குறைவாக ஒப்பந்தக் காலம் கொண்ட பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களில் கூறு எண்.13.4ல் (ஒப்பந்ததாரர்களுக்கான அறிவுரைகள்) கீழ்க்கண்டவாறு தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒப்பந்ததாரர்கள் தங்களின் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பு மற்றும் விலைகள், அப்பணிகள் மேற்கொள்ளும் காலங்களில் இறுதியிட்டு இருக்கும். அந்த மதிப்பு மற்றும் விலைகள் எந்த காரணம் கொண்டும் மாற்றி அமைக்கப்படமாட்டாது".

மேலும் 18 மாதங்களுக்கு மேல் ஒப்பந்தக்காலம் கொண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் கூறு எண்.13.4 (ஒப்பந்ததாரர்களுக்கான அறிவுரைகள்)-ல் கீழ்கண்டவாறு தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. "ஒப்பந்ததாரர்கள் தங்களின் ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பு மற்றும் விலைகள் ஒப்பந்தங்களுக்கான விதிகள் கூறு எண்.47-ல் தொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அப்பணிகள் மேற்கொள்ளும் காலங்களில் விலை மாறுதலுக்கு உட்பட்டது". இந்நிகழ்வில் மேற்கண்ட நடைமுறைப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொகுதி-1 கிளாஸ் 28-ன் படி அல்லாமல், தொகுதி-2 கிளாஸ் 6-ன்படி தான் ஒப்பந்ததாருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. பொது நிறுவனங்களின் குழு பரிந்துரைப்படி இம்முறை கட்டாயமாக பின்பற்றப்படும்.

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.கா.கு. எண்.27049/ MII/ 04-9, நாள் 7-4-2005)

(1)	(2)	(3)	(4)	(5)
8	8	7.1	General	The Committee desires that expeditious action should be taken by the Government on all the recommendations contained in the report and the final report of action taken should be sent within three months.
			(6)	(7)
			In future, expeditious action will be taken on the recommendation of the Public Undertakings Committee and report will be sent in due course.	Treated as settled

(Municipal Administration and Water Supply Department U.O. Note No.27049/ MII/ 04-9, dated 7-4-05)

அறிக்கையில் கண்டுள்ள அனைத்து பரிந்துரைகள் மீதும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், திட்டவட்டமான கால வரையறைகள் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் அதனைப் பின்பற்ற வேண்டும் என்றும் பிற இனங்களைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றிய இறுதி அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் குழு விரும்புகிறது.

(6)

இனி வருங்காலங்களில் குழுவின் பரிந்துரைகளின் மீது விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய நேரத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

(நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.கா.கு. எண்.27049 / MW / 04-9, நாள் 7-4-2005)

(7)

தீர்க்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS